**கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைந்த உயிரியல் இரசாயன, நுண்ணுயிரியல், உயிரியல் தொழில்நுட்ப நிறுவகம் - 2018**

---

## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைந்த உயிரியல் இரசாயன, நுண்ணுயிரியல், உயிரியல் தொழில்நுட்ப நிறுவகத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளின் பொழிப்பொன்று உள்ளடங்கலாக, நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

நிறுவகத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிசார் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிறுவகத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிறுவகம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

நிறுவகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிறுவகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன்

அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிறுவகத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்,

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிறுவகத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிதியம் செயற்படுகின்றதா எனவும்,

- நிறுவகம் தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்,

- நிறுவகத்தின் வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொது மற்றும் குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்துடன் செயற்படுத்துதல் உரிய அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்தல் மற்றும் சொத்துக்களுக்காக கணக்களிதன்மையை பேணிச் செல்லல், முகாமைத்துவத்தினால் பொது மற்றும் திட்டவட்டமான அதிகாரத்துடன் கூடிய சொத்துக்ளுக்கு மாத்திரம் சொத்துக்களை அணுகுதல், பதிவு செய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணக்களிதன்மை காணப்படும் சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியில் சீராக்கம் மற்றும் வேறுபாடுகள் காணப்பட்டால் அது தொடர்பாக உரிய நடவடிக்கைகளை எடுத்தல் போன்றவற்றுக்கான நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக் கொள்வதற்கு போதியளவு “முறையாக திட்டமிடப்பட்ட” உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையொன்றை நிறுவகத்தினால் பராமரித்துக் கொள்வதற்காக அவசியமாகவுள்ளது.

### 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

#### 1.6.1 முற்பணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| பொருட்கள் மற்றும் சேவைகளின் விநியோகத்தின் பின்னர் செலுத்துகைகள் மேற்கொள்ளப்பட வேண்டியபோதிலும், புனரமைப்புக்களுடன் தொடர்புடைய ரூபா 408,413 கூட்டுத்தொகையான தொகைகள் அவ்வாறான புனரமைப்புக்களின் ஆரம்பத்தில் முற்பணங்களாகப் பெறப்பட்டிருந்ததுடன் 11 சந்தர்ப்பங்களில் உத்தியோகத்தர்களினால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | புனரமைப்புக்கள் பூர்த்தியடைந்த பின்னர் மாத்திமே செலுத்துகைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். இருப்பினும், புனரமைப்பின் பூர்த்தியாக்கலின் பின்னர் உடனடியாக ஒப்பந்தக்காரர்க்கு செலுத்துகைகளினை மேற்கொள்வதற்கான தேவைப்பாடு காணப்படுமாகையினால், முற்பணங்கள் பெறப்பட வேண்டியதுடன் எமது நிறுவகத்திலுள்ள உத்தியோகத்தர்களின் பாதுகாப்பில் நிறுத்தி வைக்கப்படுகின்றது. | சேவைகளினைப் பெறவேண்டிய சந்தர்ப்பத்தில், தொடர்புடைய பணி பூர்த்தியின் பின்னர் செலுத்துகைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

### 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் | | | |
| நிதிப்பிரமாணம் 371 மற்றும் 2015 யூலை 14 ஆந் திகதிய 03-2015 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | (i) முற்பணங்களின் வழங்குகளை பதவிநிலை உத்தியோகத்தர்களுக்கு மட்டுப்படுத்தப்பட வேண்டிய போதிலும், ரூபா 213,906 கூட்டுத்தொகையான முற்பணங்கள் 15 சந்தர்ப்பங்களில் 08 பதவிநிலைத் தரமற்ற உத்தியோகத்தர்களுக்கு அளிக்கப்பட்டிருந்தது. | பதவிநிலை உத்தியோகத்தர்களுக்கு மாத்திரம் முற்பணங்களினை அளிக்கும் எல்லையினை மட்டுப்படுத்தும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையினை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன. | நிதிப் பிரமாணங்கள் மற்றும் சுற்றறிக்கைகளிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| | (ii) முற்பணங்கள் அவை அளிக்கப்பட்டதற்கான நோக்கம் பூர்த்தியடைந்த பின்னர் உடனடியாக தீர்ப்பனவுசெய்யப்பட வேண்டியபோதிலும், 26 | புனரமைத்தல்களின் பூர்த்திக்காக எதிர்பார்க்கப்பட்ட காலப்பகுதி மிகைத்திருந்தமையினால், முற்பணங்களினை தீர்ப்பனவு செய்வாற்கு | நிதிப்பிரமாணங்கள் மற்றும் சுற்றறிக்கைகளிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | சந்தர்ப்பங்களில் பெறப்பட்ட ரூபா 1,497,569 கூட்டுத்தொகையான முற்பணங்களின் செலுத்துகை 1 ½ மாதங்கள் தொடக்கம் 11 ½ மாதங்கள் வரையான வீச்சினையுடைய காலப்பகுதியொன்றுக்கு தாமதமடைந்து காணப்பட்டிருந்தது. | மிகைக் காலப்பகுதி எடுக்கப்பட வேண்டியிருந்தது. முற்பணங்களினை 14 நாட்களுக்குள் கட்டாயமாக தீர்ப்பனவினை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |
| | | (iii) | முற்பணங்களினை அளிக்கையில், அதிஉத்தம தொகை ரூபா 100,000 இற்கு மட்டுப்படுத்தப்பட வேண்டிய அதேவேளை, 03 சந்தர்ப்பங்களில் ரூபா 188,575 தொடக்கம் ரூபா 397,900 வரையான வீச்சில் முற்பணங்கள் அளிக்கப்பட்டிருந்தது. | அந்த செலுத்துகையினை மேற்கொள்வதற்கு எவ்வித ஏனைய தெரிவும் காணப்படாததினால், மேற்குறித்த 03 சந்தர்ப்பங்களில் முற்பணங்கள் அளிக்கப்பட்டிருந்தது. இருப்பினும், கணக்காய்வுக் குழு அறிவுறுத்தல்களின் பிரகாரம், இனிமேல் அவ்வாறான செலுத்துகைகளினை மேற்கொள்வதிலிருந்து தடுப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. | நிதிப்பிரமாணங்கள் மற்றும் சுற்றறிக்கைகளிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் பகுதி II இன் 15(v) ஆம் உப பிரிவு | | உயர் கல்வி நிறுவனங்களினால் நடாத்தப்பட இருக்கின்ற பாடநெறிகளுக்காக பல்கலைக்ககழக மானியங்கள் ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெறப்பட வேண்டிய போதிலும், தற்போது நிறுவனத்தினால் நடாத்தப்பட்ட 05 பாடநெறிகள் தொடர்பில் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. | பல்வேறு சந்தர்ப்பங்களில் இந்தப் பாடநெறிகளுடன் தொடர்புடையவற்றை கொழும்பு பல்கலைக்கழகத்தின் நியதிச்சட்ட குழு சட்டத்தின் மூலம் மீளாய்வுசெய்திருக்கின்ற துடன் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ள கொழும்பு பல்கலைக்கழகத்தின் சபைக்கு அவற்றை அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | பல்கலைக்கழக சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | பல்கலைக்கழகங்களின் தாபன கோவையின் XX ஆம் அத்தியாயத்தின் 3.1 மற்றும் 3.2 ஆம் பிரிவுகள் | நிறுவகத்தின் கல்விசார் உத்தியோகத்தர்களின் 09 உறுப்பினர்கள் வருகை தந்தமையினை உறுதிப்படுத்தியிராது, ரூபா 19,224,085 சம்பளங்கள் மற்றும் படிகள் செலுத்தப்பட்டிருந்தது. | கல்விசார் உத்தியோகத்தர்களின் உறுப்பினர்கள், நிறுவகத்தின் பணிப்பாளரின் மேற்பார்வையின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட வேலை விதிமுறைகள் மற்றும் கால நேர அட்டவணைகளின் பிரகாரம் அவர்களின் கடமைகளினைப் புரிகின்றனர் என மேலும் அவதானிக்கப்பட்டது. இந்த நிறுவகம் கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைந்த நிறுவகமொன்றாகக் காணப்படுகின்றதனால், இது தொடர்பில் பல்கலைக்கழகத்தினால் பின்பற்றப்படும் நடைமுறைகள்கூட நிறுவகத்தினால் பின்பற்றப்பட வேண்டிக் காணப்படுகின்றது. | பல்கலைக்கழகத்தின் தாபன விதிக்கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஈ) | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய IA/2002/02 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கை | கணனி, உதிரிப்பாகங்கள் மற்றும் மென்பொருட்களுக்காக குறித்துரைக்கப்பட்ட வடிவத்தில் நிலையான சொத்துக்களின் தனியானதொரு பதிவேடொன்று தயாரிக்கப்பட்டு பேணப்பட்டிருக்கவில்லை. | 2019 ஆம் ஆண்டிலிருந்து கணனிகள் மற்றும் உதிரிப்பாகங்களுக்காக தனியானதொரு நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான நிறுவகத்தின் தொழிற்பாடுகளினை தொடர்புடைய முன்னைய ஆண்டிற்கான ரூபா 5,602,236 பற்றாக்குறையுடன் ஒப்பிடுகையில் ரூபா 4,847,672 பற்றாக்குறையொன்றை விளைவித்திருந்தமையால், நிதிசார் விளைவில் ரூபா 754,564 முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டு வினைத்திறமையின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2017 ஆம் ஆண்டின் பொருள் கணக்கெடுப்புச் சபையின் அறிக்கையின் பிரகாரம், ரூபா 914,800 பெறுமதியான பயன்படுத்தப்படாத 31 வகைகளினை அழிப்பதற்கு பரிந்துரைகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் தொடர்புடைய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உத்தியோகத்தர்களின் பற்றாக்குறை மற்றும் நிபுணர்களின் மூலம் அவற்றை பரீட்சித்து அந்தப் பொருட்களுக்கான விலைகளினை நிறுவுவதில் தாமதங்கள் ஏற்பட்டமை காரணமாக, மேற்குறிப்பிடப்பட்ட வகைகளின் அகற்றல் தாமதமடைந்து காணப்பட்டது. | பொருள் கணக்கெடுப்புச் சபையின் பரிந்துரைகள் தொடர்புடைய காலப்பகுதிக்குள் அமுல்படுத்தப்படல் வேண்டும். |

### 3.2 நிதிகளின் குறைப்பயன்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நன்கொடை நிதி மற்றும் சொத்துக்கள் மாற்றீட்டு நிதிகளில் ரூபா 12,120,552 கூட்டுத்தொகையான தொகைகள் காணப்பட்டதுடன் இந்த நிதிகள் 02 வருடங்கள் காலப்பகுதியொன்று முதல் குறித்த நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | பேராசிரியர் எரிக் கருணாநாயக்கா ஞாபகார்த்த புலமைப்பரிசிலை அளிப்பதற்கான ஆரம்ப ஏற்பாடுகள் நன்கொடை நிதியத்திலிருந்து மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் 2018.12.31 இல் முடிவடையும் ஆண்டிற்குள் சொத்துக்கள் மாற்றீட்டு நிதியிலிருந்து (Asset Replacement Fund) ரூபா 4,025,000 பெறுமதியனா Real Time PCR Machine இனைக் கொள்வனவு செய்வதற்காக 2018.09.03 இல் விலைமனுக்களினை அழைப்பதற்காக, 2018.12.03 இல் கொள்வனவுக் கட்டளையொன்று இடப்பட்டிருந்தது. 2019.02.11 இல் மேற்குறித்த இயந்திரத்திற்காக பணம் செலுத்தப்பட்டிருந்தது. ஆகையினால், 2018 ஆம் ஆண்டில் சொத்துக்கள் மாற்றீட்டு நிதி (Asset Replacement Fund) பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பனை ஏற்றுக்கொள்ள முடியாது. | நிதிகளின் அதிஉத்தம பயன்படுத்துகை உறுதிப்படுத்தப்படல் வேண்டும். |

### 3.3 பெறுகை முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| பெறுகை வழிகாட்டல்களின் 2.8.1(அ) வழிகாட்டலின் பிரகாரம், எந்த உறுப்பினரும் பெறுகைக் குழு மற்றும் தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழு ஆகிய இரண்டிலும் பணியாற்றக்கூடாது. இருப்பினும், நிறுவனத்தின் பெறுகைக் குழுவின் உறுப்பினரொருவர் ரூபா | இனிமேல் அவ்வாறான நியமனங்கள் மேற்கொள்வதை தடுப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. | பெறுகை வழிகாட்டல்களுடன் இணங்கி செயற்படல் வேண்டும். |

434,240 பெறுமதியான 04 வளிப்பதனாக்கிகளின் கொள்வனவுடன் தொடர்புடைய தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுவிற்கு நியமிக்கப்பட்டிருந்தமை தெரிவுக் கணக்காய்வு பரீட்சிப்பில் அவதானிக்கப்பட்டது.

### 3.4 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| நிறுவகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 47 ஆகக் காணப்பட்டதுடன் அதில், மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 15 பதவிகளில் வெற்றிடங்களை அவதானிக்கக்கூடியதாகக் காணப்பட்டது. | கல்விசாரா உத்தியோகத்தர்களில் காணப்பட்ட வெற்றிடங்களில், முகாமைத்துவ உதவியாளர் பதவி (புத்தகக் காப்பாளர்) மற்றும் முகாமைத்துவ உதவியாளர்களுக்காக (shorff) விண்ணப்பங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றதுடன் ஆட்சேர்ப்புக்கள், ஆட்சேர்ப்புத் திட்டத்தின் பிரகாரம் மேற்கொள்ளப்படும். 04 முகாமைத்துவ உதவியாளர் பதவிகள் மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர் பதவிக்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 876 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் பல்வேறு சந்தர்ப்பங்களில் அமைச்சிடமிருந்து பெயர்ப்பட்டியல் கோரப்பட்டிருந்தது. நிலவிய அரசியல் நிலைமையின் பிரகாரம், பெயர்ப்பட்டியலினைப் பெற்றுக்கொள்வது கடினமாகக் காணப்பட்டதுடன் ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்படும் வரை அந்தப் பதவிகளின் கடமைகளினை நிறைவேற்றுவதற்கு பணிப்பொறுப்பளிப்பு அடிப்படையில் (Duty assignment basis) ஊழியர்கள் அமர்த்தப்பட்டிருந்தனர் என்பதை கனிவுடன் அறியத்தருகின்றேன். | வெற்றிடங்கள் உடனடியாக நிறப்பப்படல் வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பு

### 4.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான பிரதான இரண்டு M.Sc பாடநெறிகள், Molecular life Science and Cellular & Molecular Immunology பாடநெறிகளுக்கான மாணவர்களின் பதிவு 50 மாணவர்களாகக் காணப்பட முடியும். இருப்பினும், பதிவு செய்யப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை முறையே 12 மற்றும் 7 அல்லது 25 சதவீதம் மற்றும் 15 சதவீதமாகக் காணப்பட்டிருந்தது. | செயல்நடவடிக்கைத் திட்டமானது எதிர்காலத்தில் அடைந்து கொள்ள எதிர்பார்க்கப்படும் முன்கணிப்பொன்றாகக் காணப்படுகின்றது. பாடநெறிகளுக்கான பதிவுகள் தெரிவுக்கான உளச்சார்புத் தேர்வு மற்றும் அதனையடுத்து நடாத்தப்பட்ட நேர்முகத்தேர்வின் பெறுபேறுகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டன. 2018 ஆம் ஆண்டில் இரண்டு M.Sc மற்றும் Molecular life Science and Cellular & Molecular Immunology ஆகிய பாடநெறிகளிற்காக 50 மாணவர்களினை பதிவுசெய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும், தொடர்புடைய | செயல்நடவடிக்கைத் திட்டம் நடைமுறையில் அமுல்படுத்தக்கூடிய முறையொன்றில் தயாரிக்கப்பட வேண்டியதுடன் முகாமைத்துவத்தின் கவனம் அவர்களின் அதிஉத்தம வினைத்திறனை உறுதிப்படுத்த, நிறுவகத்தின் வளங்களை பயன்படுத்துவது தொடர்பில் கவனஞ் |

| | | | |
|---|---|---|---|
| | | தகைமைகளினைப் திருப்பதிப்படுத்தியிருந்த 12 மாணவர்கள் மற்றும் 07 மாணவர்கள் மாத்திரம் பாடநெறிகளுக்காக பதிவு செய்யப்பட்டிருந்தனர். | செலுத்தப்படல் வேண்டும். |
| (ஆ) | செயல்நடவடிக்கைத் திட்டத்தில் குறித்துரைக்கப்பட்ட 09 நோக்கங்களுடன் தொடர்புடைய 14 செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்காமை 2018 ஆம் ஆண்டுடன் தொடர்புடைய செயல்நடவடிக்கைத் திட்டத்தின் செயலாற்றலினை மீளாய்வுசெய்கையில் அவதானிக்கப்பட்டது. | 2018 ஆம் ஆண்டு முழுவதும் 03 ஆய்வுகள் நடாத்தப்பட்டதுடன் இறுதி ஆராய்ச்சி கட்டுரைகள் 2019 ஆம் ஆண்டில் கையளிக்கப்படவேண்டுமென பட்டியல்படுத்தப்பட்டுள்ளது. 9 நோக்கங்களினை 2018 ஆம் ஆண்டில் அடைந்துள்ள முடியாது காணப்பட்டதுடன் 2019 ஆம் ஆண்டில் அந்த நோக்கங்களினை அடைந்துகொள்வதற்கு அடியெடுப்புக்கள் எடுக்கப்படுமென 2018 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தின் செயலாற்றல் மீளாய்வில் தொடர்புடைய பொறுப்பு கையளிக்கப்பட்டிருந்த உத்தியோகத்தர்கள் அறிவித்திருந்தனர். Clones இன் பற்றாக்குறை காரணமாக ஒரு நோக்கம் அடைந்துகொள்ள முடியாது காணப்பட்டது. 2018 ஆம் ஆண்டின் போது ஒரு பயிற்சிப் பட்டறை நடாத்தப்பட்டிருந்ததுடன் 2019 ஆம் ஆண்டில் மற்றுமொரு பயிற்சிப் பட்டறையை நடாத்துவதற்குத் தேவையான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றது. | செயல்நடவடிக்கைத் திட்டம் நடைமுறையில் அமுல்படுத்தக்கூடிய முறையொன்றில் தயாரிக்கப்பட வேண்டியதுடன் முகாமைத்துவத்தின் கவனம் அவர்களின் அதிஉத்தம வினைத்திறனை உறுதிப்படுத்தி நிறுவகத்தின் வளங்களை பயன்படுத்துவது தொடர்பில் கவனஞ் செலுத்தப்படல் வேண்டும். |

### 4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2018 ஆம் ஆண்டுடன் தொடர்புடைய பாதிடப்பட்ட வருமானம் மற்றும் செலவினத்தை உள்ளபடியானவைகளுடன் ஒப்பிடும்போது, உருவாக்கப்பட்ட வருமானம் பாதிடப்பட்ட தொகைக்கு 09 சதவீதத்தினை விடக் குறைவாக தொடர்ந்தும் காணப்பட்டதுடன் 03 செலவின விடயங்கள் தொடர்பில் வேறுபாடுகளின் வீச்செல்லை 8 சதவீதம் தொடக்கம் 95 சதவீதம் வரை அவதானிக்க முடிந்தது. | மாணவர்களின் எண்ணிக்கை மற்றும் வருடாந்த அரச மானியங்கள் குறைவடைந்ததிலிருந்து, உள்ளபடியான வருமானம் எதிர்பார்க்கப்பட்ட வருமானத்தினை விட குறைவடைந்து காணப்பட்டது. இருப்பினும், நிறுவகம் மத்திமமானதாகக் காணப்பட்ட பணவீக்கம், விநியோகத்தர்கள் மற்றும் பராமரிப்பு தொடர்பில் செலவினங்களினை பேனவேண்டிக் காணப்பட்டதிலிருந்து, பாதிடப்பட்ட தொகை மிகைத்திருந்தது. | பாதீடானது நிதிக் கட்டுப்பாட்டில் வினைத்திறனான கருவியொன்றாகப் பயன்படுத்தப்படல் வேண்டும். |